Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

செய்தியாளர்கள் தேவை



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 66 | திங்கள் Monday | 05.01.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# பொங்கல் ரொக்கப்பரிசு ரூ.3,000 வழங்கப்படும்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு; பொங்கல் பரிசுத் தொகுப்பை பெறுவதற்கான டோக்கன் வினியோகமும் தொடக்கம்



சென்னை,

தமிழகத்தில் கடந்த 2021-ம் ஆண்டு அதிமுக ஆட்சி காலத்தில் பொங்கல் பண்டிகையையொட்டி, ரேஷன் கடைகளில் அரிசி அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.2,500 ரொக்கப் பணம் வழங்கப்பட்டது. அதன்பிறகு, சட்டசபை தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைத்த திமுக, 2022, 2023, 2024 ஆகிய ஆண்டுகளில் பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.1,000 ரொக்கப் பணத்தை வழங்கியது.

ஆனால், கடந்த ஆண்டு (2025) பொங்கல் பரிசு தொகுப்பு மட்டுமே வழங்கப்பட்டது. ரொக்கப்பணம் எதுவும் வழங்கப்படவில்லை.

தமிழகத்தில் வரும் ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடக்க இருப்பதால், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொங்கல் பரிசு தொகுப்புடன் ரொக்கப் பணமும் வழங்கப்படும் என்று பொதுமக்கள் எதிர்பார்த்தார்கள். இந்த நிலையில், 2026 பொங்கல் பரிசுத் தொகுப்புக்கு ரூ.248 கோடி நிதியை ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டது. ஒருகிலோ பச்சரிசி, ஒருகிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு கொள்முதல் செய்வதற்காக இந்த தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுத் துறை தகவல் தெரிவித்தது.

இந்த அறிவிப்பை கேட்டு, பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர்

. இந்த ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு பரிசு தொகுப்பு மட்டும்தானா?, ரொக்கப் பணம் கிடையாதா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்தது பொங்கல் பரிசு தொகுப்புடன் எவ்வளவு ரொக்க பணம் வழங்குவது என்பது குறித்து அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். ஆலோசனையின் முடிவில் ரூ.3 ஆயிரம் ரொக்க பணம் வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டதாக தகவல் வெளியானது. இந்த நிலையில், இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்று வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, அரிசி அட்டைதாரர்களுக்குக் ரூ.3 ஆயிரம் பொங்கல் பரிசாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

இயற்கையின் முதன்மை வடிவாய் அமைந்த சூரியனுக்கும் உழவர்களின் உழைப்பிற்கு உறுதுணையாய் விளங்கும் கால்நடைகளுக்கும் உலக மக்களுக்கு உணவளித்துப் பசி பிணி போக்கும் விவசாயிகளுக்கும் நன்றி கூறி குடும்ப உறவுகள் ஒன்றிணைந்து உலகத் தமிழர்களால் பன்னெடுங் காலமாகக் கொண்டாடப்படும் பாரம்பரிய உன்னதவிழா பொங்கல் திருநாள் ஆகும்.

பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிட தமிழ்நாடு அரசு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒருகிலோசர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே அறிவித்துள்ளார்கள். இதன்மூலம் 2,22,91,710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் பயன்பெறுவர்.

மேலும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள வேட்டி சேலைகள் அனைத்தும் எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பொங்கல் விழாவை மேலும் சிறப்பாக கொண்டாடிட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் பொங்கல் ரொக்கப் பரிசாக ரூ.3000/- வழங்கிட . மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார். பொங்கல் திருநாளுக்கு முன்பாக ரொக்கப் பரிசும், பொங்கல் பரிசுத் தொகுப்பும், வேட்டி சேலைகளும் அனைத்து நியாயவிலைக் கடைகள் வழியாக வழங்கிட அனைத்து ஏற்பாடுகளும் செய்ய முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து, பொங்கல் பரிசை சுமூகமாக பயனாளிகளுக்கு சென்று சேரும் வகையில் நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

அதன்படி தமிழகம் முழுவதும் பொங்கல் பரிசுக்கான டோக்கன் வினியோகம் செய்யும் பணி தொடங்கி இருக்கிறது.

தலைநகர் சென்னையில், பயனாளிகளின் வீடுகளுக்குச் சென்று டோக்கன் வினியோகிக்கும் பணிகளில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் இந்த டோக்கனில் அவருக்கு பொங்கல் பரிசு அளிக்கப்படும் அல்லது பரிசுத் தொகை பெறும் நேரம், தேதியுடன் குறிப்பிடப்பட்டு உள்ளது.

மேலும், ரேஷன் கடையின் பெயர், குடும்ப அட்டைதாரர் பெயர், அட்டை எண், தெரு, டோக்கன் எண் உள்ளிட்ட விவரங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் குறிப்பட்ட விவரங்களை பின்பற்றி, உரிய தேதியில், உரிய நேரத்தில் பயனாளிகள் பொங்கல் பரிசை பெற்றுக் கொள்ளலாம்.

பொங்கல் பண்டிகைக்கு முன்பாகவே அனைத்து பயனாளிகளுக்கும் பரிசுத்தொகுப்பு மற்றும் ரொக்கத்தை அளிக்க நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன. அனேகமாக ஜன.8 அல்லது ஜன.9ம் தேதி முதல் இவை வினியோகிக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

# வெனிசுவேலா விவகாரம்

## அமைதிப் பேச்சுவார்த்தையே தீர்வு; இந்தியா வலிறுத்தல்



வெனிசுவேலா அதிபர் நிகோலஸ் மதுரோ கைது செய்யப்பட்ட விவகாரத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, "இந்திய வெளியுறவு அமைச்சகம் கூறியதாவது, வெனிசுவேலாவில் சமீபத்திய நடவடிக்கைகள் கவலையளிக்கிறது. வெனிசுவேலா மக்களின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்புக்கு இந்தியா தனது ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

வெனிசுவேலாவின் அமைதி மற்றும் நிலைத்தன்மையை உறுதிசெய்து, பேச்சுவார்த்தைமூலம் பிரச்னைகளை அமைதியான முறையில் தீர்க்குமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் அழைக்கிறோம்.

மேலும், வெனிசுவேலாவில் உள்ள இந்தியர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியத் தூதரகம் வழங்கும்" என்று தெரிவித்துள்ளனர். இருப்பினும், வெனிவேசுலா அதிபர் மதுரோவை கைது செய்தஅமெரிக்காவை வெளிப்படையாக இந்தியா குறிப்பிடவில்லை. னிசுவேலாவிலிருந்து போதைப் பொருள் கடத்தப்பட்டு வருவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நீண்ட காலமாகக் குற்றஞ்சாட்டி வந்தநிலையில், வெனிசுவேலா அதிபர் நிகோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை சனிக்கிழமையில் (ஜன. 3) அமெரிக்க படை கைது செய்தது. வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோவை அமெரிக்கா கைது செய்த நிலையில் இடைக்கால அதிபர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். வெனிசுலாவின் தற்போது இருக்கும் துணை அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ் - ஐ இடைக்கால அதிபராக அந்நாட்டு உச்சநீதிமன்றம் நியமித்தது. "வெனிசுலாவின் ஒரே அதிபர் நிக்கோலஸ் மதுரோ மட்டும்தான். அவரை உடனடியாகவும், நிபந்தனையின்றியும் அமெரிக்கா விடுதம்லை செய்ய வேண்டும்" என இடைக்கால அதிபர் டெல்சி தெரிவித்துள்ளார்.

* டெல்சி ரோட்ரிக்ஸ் 2018ம் ஆண்டு ஜூன் மாதம் வெனிசுலா நாட்டின் துணை அதிபராக நியமனம் செய்யப்பட்டார். இவர் தற்போது துணை அதிபர் பதவியுடன் நிதி மற்றும் எண்ணெய் துறை அமைச்சராகவும் உள்ளார். மதுரோவின் சோசலிச அரசை பாதுகாத்ததற்காக, டெல்சி ரோட்ரிக்ஸ்-ஐ மதுரோவால் புலி என்று வர்ணிக்கப்பட்டு இருக்கிறார்.

* 1969ம் ஆண்டு மே 18ம் தேதி பிறந்த 56 வயதான டெல்சி ரோட்ரிக்ஸ் கராகஸ் நகரத்தைச் சேர்ந்தவர். இவர் 1970களில் புரட்சிகர லிகா சோசலிஸ்டா கட்சியை நிறுவிய ஜார்ஜ் அன்டோனியோ ரோட்ரிக்ஸின் மகள் ஆவார்.Image 1517208

* இவர் வெனிசுலாவின் மத்திய பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற ஒரு வழக்கறிஞர். கடந்த 10 ஆண்டுகளில் இவரது அரசியல் செல்வாக்கு வேகமாக உயர்ந்தது. இவர் 2013- 2014ம் ஆண்டு தகவல் தொடர்பு அமைச்சராகப் பணியாற்றினார். இவர் 2014முதல் 2017ம் ஆண்டு வரை வெளியுறவு அமைச்சராக இருந்தார்.

# உருவாகிறது புதிய காற்றழுத்தம்: தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு



தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துள்ளது. இயல்பை ஒட்டிய மழை நமக்கு கிடைத்துள்ளது. ஆப்கானில் அதேசமயம் டிட்வா புயலுக்கு பிறகு தமிழ்நாட்டில் போதிய மழை பெய்யவில்லை.

ஜனவரி தொடக்கத்தில் தமிழ்நாடு முழுவதும் பரவலாக மழை பெய்தது. இந்த நிலையில், ஜனவரி மாதம் புதிய காற்றழுத்தம் உருவாக வாய்ப்புள்ளது என்று தனியார் வானிலை ஆய்வாளர் ஹேமசந்திரன் தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "இலங்கையை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடலில் ஜன.8ம் தேதி புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி, தமிழககடற்கரையை நோக்கி நகரக்கூடும்.

இதனால் ஜனவரி 09 - 12 வரை தமிழகத்தில் மழை தீவிரமடைய வாய்ப்புள்ளது.

குறிப்பாக ஜனவரி 10, 11 தேதிகளில் கடலோர, மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் ஓரிரு இடங்களில் மிககனமழைக்கு வாய்ப்புள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

கடலோர மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர் உள்ளிட்ட இடங்களிலும், உள் மாவட்டங்களின் பல பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. பரவலாக தமிழகம் முழுவதும் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அவர் கணித்துள்ளார்.

இந்த மழை முன்னறிவிப்பு விவசாயிகள், மீனவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு முக்கியமானதாக உள்ளது. கடலோர மாவட்டங்களில் வசிப்பவர்கள் கனமழை, காற்று வீசுதல் ஆகியவற்றுக்கு தயாராக இருக்கவேண்டும் என்று வானிலை ஆய்வாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர். மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்க்கவும், விவசாயிகள் நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஜனவரி மாதத்தில் இது போன்ற மழை பொதுவாகவே பெய்வது வழக்கம். ஆனால், புதிய தாழ்வுப்பகுதி உருவாகும் வாய்ப்பு கனமழையை ஏற்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மழை விவசாயத்துக்கு உதவியாக இருக்கும் அதேநேரம், நகர்ப்புறங்களில் நீர் தேங்குதல் போன்ற பிரச்சினைகளையும் ஏற்படுத்தலாம்.

செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

### அச்சிறுப்பாக்கம் அருகே

## முருங்கை ஊராட்சியில் அங்கன்வாடி மையம் நியாய விலை கடையை சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்



செங்கல்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கம் அருகே உள்ள முருங்கை ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்திற்கு புதிதாக அங்கன்வாடி மையம், நியாய விலை கடை இந்த இரண்டு கட்டிடங்களும் ரூபாய் 28 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது முன்னக்குளம் பகுதியில் நியாய விலை கடை 10 லட்சம் ரூபாய்மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது இந்த கட்டிடத்தை திறக்கும் நிகழ்ச்சியை முருங்கை ஊராட்சி மன்ற தலைவர் உமா மகேஸ்வரி மணவாளன் இவர்களில் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் கா. சுந்தர்,காஞ்சிபுரம்நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், ஒன்றிய குழு பெருந்தலைவர் கே. கண்ணன் மாவட்ட கவுன்சிலர் வசந்தா கோகுலகண்ணன் இவர்கள் கலந்து கொண்டு புதிதாக கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்தை ரிப்பன் வெட்டி குத்துவிளக்கு ஏற்றி வைத்து பொதுமக்கள் பயன்பாட்டுக்காக திறந்து வைத்தனர் . முன்னதாக சிறப்பு அழைப்பாளர்களுக்கு ஊராட்சி சார்பில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது . இந்த நிகழ்ச்சியில் ஊராட்சித் துணைத் தலைவர் மகாலட்சுமி சக்திவேல், வார்டு உறுப்பினர்கள் ஊர் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மாத்தூர் ஊராட்சியில் சி.எஸ்.ஐ. ஆலயத்திற்கு குமரவேல் எம்.எல்.ஏ. இருக்கைகள் வழங்கினார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள மாத்தூர் பகுதியில் உள்ள சிஎஸ்ஐ சர்ச்சியில் பொதுமக்கள் அமர இருக்கை வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர் கிறிஸ்துவ மக்கள் கோரிக்கை வைத்தனர் அதன் பெயரில் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் அவருடைய சொந்த செலவில் இரண்டு லட்ச ரூபாய்மதிப்பிலான அமருவதற்கான பெஞ்ச் வழங்கினார் கிறிஸ்துமக்கள் சட்டமன்ற உறுப்பினருக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்தனர் இந்த நிகழ்ச்சியில் மதுராந்தகம் ஆயர் சபை ஊழியர் தாணியல் பிரதிப் கிரிதரன் ஊராட்சி மன்ற தலைவர் கல்யாணி பன்னிர், கிருஷ்னமூர்த்தி ராஜாசம்பத்ரவிஜெயந்தி இராபர்ட் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்

அதனைத் தொடர்ந்து

மதுராந்தகம் அருகே உள்ள கரிக்கிலி,வெள்ள புத்தூர், கீழ்பட்டு, பகுதிகளில் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள இளைஞர்கள் அதிகமாக உள்ளனர் விளையாட்டு ஊக்குவிக்கும் வகையில் கிரிக்கெட் கிட் வழங்கும் நிகழ்ச்சியில் மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் அவர் சொந்த செலவில் 5 கிரிக்கெட் கிட், 3வாலிபால் கிட், இவைகளை விளையாட்டு வீரர்களுக்கு வழங்கினார் .இந்த நிகழ்ச்சியில் அதிமுக நிர்வாகிகள் ஊராட்சி மன்ற தலைவர் புஷ்பா கொடியான் மற்றும் விளையாட்டு வீரர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

### அச்சிறுப்பாக்கம் மார்வார் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில்

## 2000 ஆம் ஆண்டு கல்வி பயின்ற முன்னாள் மாணவர்களுக்கான வெள்ளிவிழா



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் மார்வார் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2000 ஆம் ஆண்டு கல்வி பயின்ற முன்னாள் மாணவர்களுக்கான வெள்ளிவிழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது இந்நிகழ்ச்சியை முன்னாள் மாணவர்கள் ராஜேஸ் கண்ணன்,வெற்றி செல்வி ,சக்திவேல், கணேஷ் , ர:ஃபி, வெங்கடேஷ், தனசேகர் மற்றும் முன்னாள் மாணவர் களுக்கான பள்ளியின் தூதுவர் தணிகைவேல் ஒருங்கிணைத்தனர். 25 வருடங்களுக்கு பிறகு முன்னாள் மாணவர்கள் ஒன்று கூடி தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். தங்கள் பசுமை கால நினைவுகளை நினைவு கூர்ந்தனர் இந்த ஆண்டு சிறந்த முன்னாள் மாணவர்களாக பள்ளிக்கு பெருமை சேர்த்த பகுத்தறிவு, முபாரக், கெங்காதரன் ஆகியோருக்கு பாராட்டுகளை தெரிவித்தனர்.சிறப்பாக பணியாற்றிய பள்ளியின் ஓவிய ஆசிரியர் செந்தில்குமரன் துப்புரவு பணியாளர் சுதா ஆகியோர்களை கௌரவித்தனர் மேலும் உயர்கல்வி நுழைவுத் தேர்வு எழுத உள்ள மாணவர்களுக்கு நுழைவு தேர்வு கட்டண செலவை ஏற்றுக் கொண்டனர்.



தூத்துக்குடி விமான நிலைய விருந்தினர் அறையில் தமிழ்நாடு தலைமை தேர்தல் அலுவலர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ள சிறப்பு தீவிர திருத்த பணிகள் வாக்காளர் பட்டியல் பார்வையாளர்/இயக்குனர்,துணிநூல் துறை ஆர்.லலிதா மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் இளம்பகவத், வாக்காளர் பதிவு அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.



## வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் குறித்த சிறப்பு முகாம்களை கலெக்டர் பிருந்தாதேவி பார்வையிட்டு ஆய்வு செய்தார்

சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் (04.01.2026) நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் குறித்த சிறப்பு முகாம்களை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.பிருந்தா தேவி. இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

சேலம் மாவட்டத்திற்குட்பட்ட 11 சட்டமன்ற தொகுதிகளிலுள்ள 1346 வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் கடந்த 27.12.2025 28.12.2025 மற்றும் 03.012026 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இம்முகாம்களில் வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டவர்கள். வாக்காளர் பட்டியலில்பெயர்சேர்ப்பதற்கு படிவம் தனை 41339 நபர்களும் பெயர் நீக்கம் செய்வதற்கு படிவம்7.னை 997 நபர்களும் குடியிருப்பை மாற்றுவதற்கும், நடப்பு வாக்காளர்பட்டியலுள்ள பதிவுகளை திருத்தம் செய்வதற்கும் மாற்று வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை பெறுவதற்கும் மற்றும் மாற்றுத்திறனாளிகளை குறிப்பதற்கும் படிவம் 8-னை 19991 நபர்களும் என மொத்தம் 62,327 நபர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

எடப்பாடி அந்தவகையில் இன்றைய தினம் (04.01.2026) எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், ரெட்டிபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியிலும், கொங்கணாபுரம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் நடைபெற்றுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம். திருத்தம் குறித்து சிறப்பு முகாம்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் 2026சிறப்புமுகாம் நடைபெறும் இடங்களில் மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து விண்ணப்ப படிவங்களை போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது குறித்தும், மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த சிறப்பு முகாமினை மாவட்ட தேர்தல்அலுவலர் ஆட்சித்தலைவர் இரா.பிருந்தாதேவி அவர்கள்நேரில்பார்வை மேற்கொண்டார்கள்.

## அச்சிறுப்பாக்கத்தில் இதயத்தில் காதல் மூன்றாம் கட்ட படப்பிடிப்பு தொடக்கம்

### பிரபல திரை உலக நட்சத்திரங்கள், தொழிலதிபர்கள் பங்கேற்பு



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கத்தில் இமயம் ட்ரெண்டிங் கிரியேஷன் நிறுவனம்தயாரிக்கும் இதயத்தில் காதல் என்ற திரைப்படத்தை அச்சிறுபாக்கம் அகிலா செல்வம் தயாரிப்பில் இணை தயாரிப்பு தலைவி மகளிர் உரிமைக் கழகம் மற்றும் தின உரிமை பத்திரிக்கை ஆசிரியர் டாக்டர். B. கல்பனா மற்றும் ஆசி சௌந்தர் இயக்கத்தில் அறிமுக கதாநாயகன் தீபக் நடிக்கிறார், இந்த விழாவில் தவத்திரு. வடபாதி ஆதீனம் சித்தர் சுவாமிகள்,நடிகர் தர்ஷன், பிரபல தொழிலதிபர்கள் p. K.ரமேஷ், ஜெய மாருதி, உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் டாக்டர் சத்ய குமார் தயாரிப்பு நிர்வாகம். எஸ் கதிர் கேமராமேன் கார்த்திகேயன் இணை இயக்குனர்V. S. பாலமுருகன் துணை இயக்குனர் கமல் ஸ்டண்ட் யூனியன் அசாருதீன் தொழிலதிபர் ஆசைத்தம்பி ஜெயஸ்ரீ ஆலய அர்ச்சகர் கருணா ராஜசங்கரி முகமது கனி அரசியல் பிரமுகர்கள் மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்கள்.... இந்த விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அச்சிறுபாக்கம் S. செல்வம் செய்திருந்தார்..

### பெத்தநாடார்பட்டி ஊராட்சியில்

## ரூ.26.50 லட்சத்தில் திட்டப்பணிகள் முன்னாள் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்



பெத்தநாடார்பட்டி ஊராட்சியில் ரூ.26.50 லட்சம் மதிப்பீட்டில் நிறைவு பெற்ற திட்டப்பணிகளை முன்னாள் எம்.எல்.ஏ. மனோஜ்பாண்டியன் திறந்து வைத்தார்.

கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், பெத்தநாடர்பட்டி ஊராட்சி சுந்தரலிங்கபுரத்தில் ரூ.19 லட்சத்தில் கட்டி முடிக்கப்பட்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி திறப்பு விழா மற்றும்காளிநகர்,அருந்ததி;யர் நகர் பகுதியில் உள்ள 3 கோவில்களில் தலா ரூ.2.50 லட்சத்தில் திருப்பணிகள் நிறைவு பெற்று அதன் திறப்பு விழாவும் நடைபெற்றது.

ஊராட்சி மன்ற தலைவர் ஜெயராணி கலைச்செல்வன் தலைமை வகித்தார். கீழப்பாவூர் வடக்கு ஒன்றிய திமுக பெறுப்பாளர் சீ.பொன் செல்வன், ஊராட்சி துணைத்தலைவர்ஜெயராணி அந்தோணிராஜ் முன்னிலை வகித்தனர். ஆலங்குளம் முன்னாள் எம்.எல்.ஏ. மனோஜ் பாண்டியன் பங்கேற்று, மேல்நிலை நீர்;த்தேக்க தொட்டியை திறந்து வைத்தும்,திருப்பணிகள் நிறைவு பெற்ற கோவில் கட்டிடத்தை திறந்து வைத்தும் பேசினார். இந்நிகழ்ச்சியில், முன்னாள் ஊராட்சி தலைவர் இராதா, மாவட்ட பிரதிநிதி முத்துராஜ் மற்றும் வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959




பொங்கல்பண்டிகையைமுன்னிட்டு,கோயம்புத்தூரில் இருந்து சென்னை சென்ட்ரல் செல்லும் சிறப்பு ரயில் எண் 06034,ஜனவரி11மற்றும்18ஆகியஞாயிற்றுக்கிழமைகளில் இயக்கப்படும். இந்த ரயில் இரவு 11:30 மணிக்கு கோயம்புத்தூரில் புறப்பட்டு, மறுநாள் காலை 9:50 மணிக்கு சென்னை சென்ட்ரல் சென்றடையும். திருப்பூர், ஈரோடு, சேலம், ஜோலார்பேட்டை, காட்பாடி, அரக்கோணம் போன்ற ரயில் நிலையங்களில் இந்த சிறப்பு ரயில் நின்று செல்லும்.

## வீட்டுக்குள் முடங்கி கிடந்த பெண் மீட்பு



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் கீழத் தெருவை சேர்ந்தவர் வேணி இவரது கணவர் 6 மாதங்களுக்கு முன்பு இறந்து விட்டார் இதனால் மனநலம் பாதிக்கப்பட்ட அவர் கடந்த 3 மாதங்களாக வீட்டை விட்டு வெளியே வராமல் வீட்டுக்குள்ளேயே பூட்டிக்கொண்டு இருந்துள்ளார் இதுகுறித்து தகவல் அறிந்த போலீசார் தீயணைப்புத் துறையினர் உதவியுடன் அந்த பெண்ணை மீட்டு சமூக நலத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். இதனால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக சிலம்பரசன் பொறுப்பேற்றுக் கொண்டார்



தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வந்த ஆல்பர்ட் ஜான் மத்திய அரசின் தேசிய புலனாய்வு முகமைக்கு கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் மாற்றம் செய்யப்பட்டார். பின்னர் நெல்லை மாவட்ட எஸ்பியாக பணியாற்றி வந்த சிலம்பரசன் தூத்துக்குடி மாவட்ட எஸ்பியாக நியமனம் செய்யப்பட்டார்.

இந்த நிலையில் தூத்துக்குடி மாவட்ட எஸ்பியாக சிலம்பரசன் நேற்று ரகசியமாக பொறுப்பேற்றுக்கொண்டார். அவர் பொறுப்பேற்றுக் கொண்டதற்கான ஆவனங்கள் உயரதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன. இந்நிலையில் இன்று அவர் தூத்துக்குடி எஸ்பி அலுவலகத்திற்கு காலை 10 மணிக்கு வருவார் என்று காவல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் மதியம் 12 மணிவரையில் எஸ்பி அலுவலகத்திற்கு வரவில்லை.

இதனால் அவரது வருகைக்காக பத்திரிக்கையாளர்கள் காலை 10 மணி முதல் மதியம் 2மணியளவில்வந்ததுடன்ஆட்சியர்இளம்பகவத்தை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். மேலும் அவர் அடுத்த வாரம் பத்திரிக்கையாளர்களை சந்திப்பார் என்றும் காவல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

## பவானி பிரபாத் ஜே.கே. நாராயணன் சேரிட்டபுள் டிரஸ்ட் சார்பாக பொதுமக்களுக்கு இலவச சேலை வேஷ்டி வழங்கும் விழா




22ம் ஆண்டாக பவானி பிரபாத் ஜே கே நாராயணன்சேரிட்டபுள்டிரஸ்ட் சார்பாக இலவச சேலை வேஷ்டி மற்றும் உணவு வழங்கும் விழா பவானி கூடுதுறை அருகில் உள்ள ஸ்ரீ ஐயப்ப சுவாமி சேவா நல சங்க திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு பிரபாத் ஜே கே நாராயணன் சேரிட்டபுள் டிரஸ்ட் தலைவர் பிரபாத் சி.மகேந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார்.

விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் இன்ஜினியர் தண்டபாணி வரவேற்று பேசினார்.

வழக்கறிஞர் PCP. பாலசுப்ரமணியம்கிளாசிக் சக்திவேல் பவானி நகர் மன்ற துணைத் தலைவர் மணி, அஇஅதிமுக நகர செயலாளர் சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக பவானிநகர்மன்றதலைவர் சிந்தூரி இளங்கோவன் குமாரபாளையம் காவல் ஆய்வாளர் தவமணி ஆகியோர் கலந்து கொண்டு இலவசசேலை வேட்டி வழங்கினார்கள். விழாவில்பவானிஜம்பை குமாரபாளையம் சுற்றியுள்ள ஏழை எளிய மக்கள் 2000 பேருக்கு சேலை வேஷ்டி மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை டிரஸ்ட் நிர்வாகிகள் மாதேஸ்வரன், ராமராஜ் செய்திருந்தனர்.

முடிவில் நாராயண் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## ஆலங்குளம் அருகே ஆலடிப்பட்டியில்

# மார்கழி பஜனையில் பங்கேற்ற குழந்தைகளுக்கு பரிசு பொருட்களை டாக்டர் இம்மானுவேல் வழங்கினார்



ஆலங்குளம் அருகே ஆலடிப்பட்டியில் மார்கழி பஜனையில் பங்கேற்ற குழந்தைகளுக்கு பரிசு பொருட்களை டாக்டர் இம்மானுவேல் வழங்கினார்.

ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஊராட்சி, ஆலடிப்பட்டி வைத்திலிங்கசுவாமி கோவிலில் மார்கழி பஜனை ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாகும். இதையொட்டி தினந்தோறும் சுவாமிக்கு சிறப்பு அபிசேக, அலங்கார பூஜைகளும், பஜனைகள், வீதி உலாக்கள் நடைபெறும்.

இப்பஜனையில் நல்லூர், ஆலடிப்பட்டி பகுதியை சேர்ந்த சுமார் 300க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டு, தினந்தோறும் பாடல்களை பாடி ஊர்வலமாக வந்திருந்து, பூஜையில் கலந்து கொள்வர். நேற்று நடைபெற்ற இப்பூஜையில் பாரத் ஸ்கேன்ஸ் நிறுவனர் நம்ம டாக்டர் இம்மானுவேல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, இதில் பங்கேற்ற அனைவருக்கும் பரிசு பொருட்களை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:-

தமிழ்நாட்டின் கலாச்சாரத்தில் ஆழமாக வேரூன்றி உள்ள, பாரம்பரியமிக்க, பக்தி நிறைந்த வழிபாடான மார்கழி பஜனையில் ஈடுபட்டுள்ள இக்குழந்தைகளுக்கு பாராட்டுக்கள். அதிகாலை வேளையில் எழுந்திருந்து இது போன்று ஆர்வமாக பஜனை ஊர்வலத்தில் கலந்து கொள்வதால் மனமும், உடலும் சுத்தமடைந்து ஆரோக்கியம் மேம்படு;ம். இந்த பழக்க வழக்கமானது; வாழ்க்கை முறையில் நன்மைகள் பெற உதவும். உடல், மனம், ஆன்மா மூன்றிக்கும் நன்மை பயக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், கோவில் பரம்பரை அறங்காவலர் காஞ்சனகிரி, ஆனந்த் அருணா, ஊராட்சி தலைவர் சிம்சன், புலவர் சிவஞானம், ராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மதூர் ஊராட்சியில் புதிய நியாய விலை கடை திறப்பு

### மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் திறந்து வைத்தார்



மதுராந்தகம் ஜன.05

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட மதூர் ஊராட்சியில் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான நியாய விலைக் கடை அமைத்து தர பொதுமக்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்தனர் அதன் பெயரில் மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 12.30 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது அந்த கட்டிடத்தை திறக்கும் நிகழ்ச்சியை அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய மகளிர் அணி செயலாளர் லோகம்மாள் ரங்கராஜன், மதூர் கிளைச் செயலாளர் சி .மணி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கே,மணி அவைத் தலைவர் சந்திரபாபு வெளியம்பாக்கம் பன்னிர்செல்வம் கல்லியகுனம் முருகன் அம்மனூர் கோவிந்தன் மதூர் ரமணி எலப்பாக்கம் தொடக்ககூட்டறவு அலுவலர் காஞ்சனா ஒரத்தி கோகுல் ராஜேஷ் இவர்களின் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் கலந்து கொண்டு புரட்சித் தலைவர் எம்ஜிஆர் புரட்சித்தலைவி அம்மா திருவுருவ படங்களுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தனர் நியாய விலை கட்டிடத்தை ரிப்பன் வெட்டி குத்துவிளக்கு ஏற்றி வைத்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது பொதுமக்களுக்கு அரிசி சர்க்கரை எண்ணெய் பருப்பு இவைகளை வழங்கி இனிப்புகள் வழங்கப்பட்டது . இந்த நிகழ்ச்சியில் அதிமுக நிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்பு வழங்கபட்டது

# அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் 20 ஆண்டுகால கோரிக்கையை நிறைவேற்றிய தமிழக முதலமைச்சர்

## கடையநல்லூர் நகர செயலாளர் அப்பாஸ் புகழாரம்



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளுக்கு சென்று வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் மற்றும் புதிய வாக்காளர் சேர்க்கை ஆகியவற்றை நேரில் சென்று ஆய்வு செய்த கடையநல்லூர் (வடக்கு) நகரக் கழக செயலாளர் அப்பாஸ்அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் 20 ஆண்டு கோரிக்கை கையை நிறைவேற்றியதாயுமானவர் நம் தமிழக முதல்வர் புகழாரம் சூட்டியுள்ளார் இது பற்றிய விபரம் ஆவதுஇந்திய தேர்தல் ஆணையத்தின் படி வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் படி நான்கு நாட்கள் வாக்குச்சாவடி மையங்களில்முகாம் நடைபெற்றது கடையநல்லூர் நகர் பகுதியில் அமைந்துள்ள அத்தனைவாக்குச்சாவடி மையங்களையும் நேரில் சென்று பி எல் ஒ மற்றும் பி எல் 2 குழுவினரோடு பொதுமக்களுக்கு தேவையான உதவிகள் செய்யப்பட்டது 2002 ஆம் ஆண்டு வாக்களித்த ஒரு விவரம் இல்லை என நம் சட்டமன்ற தொகுதியில் குறிப்பாக கடையநல்லூர் நகர் பகுதியில் பலருக்கு தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பி உள்ளது அதற்கு முறையான ஆவணங்கள் தாக்கல் செய்து வாக்காளர்கள் பெயர்கள் எந்த வகையிலும் விடுபடாத வகையில் கழகப் பாக முகவர்கள் வார்டு கழக நிர்வாகிகள் பார்த்து வருகின்றனர் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த நகரச் செயலாளர் அப்பாஸ் கூறியதாவது 2026ஆம் ஆண்டும் தாயுமானவரின் ஆண்டு நம் தாயுமானவர் தளபதி மு க ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் பல்வேறு தரப்பு மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது குறிப்பாக இலவச மகளிர் விடியல் பயணம்கலைஞர் உரிமைத்தொகை நான் முதல்வன் திட்டம் புதுமைப்பெண் திட்டம் காலை சிற்றுண்டி திட்டம் தற்போது தமிழக முழுவதும் உள்ள அனைத்து தூய்மை பணியாளர்களுக்கு காலைசிற்றுண்டிவழங்கும் திட்டம் என பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் செயல்பட்டு வருகிறார் இத்தனைக்கும் முத்தாய்ப்பாய் வரும் ஆறாம் தேதி ஜாக்டோ ஜியோ அமைப்பு தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றம் செய்யப்படாவிட்டால் போராட்டம் செய்வோம் எனக் கூறியிருந்தனர் இந்நிலையில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் குழுவினர் பழைய ஓய்வூதியம் குறித்த அறிக்கையை தமிழக முதல்வரிடம் சமர்ப்பித்தனர் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் பழைய ஓய்வூதிய திட்டத்தின் பலன்களை வழங்கக்கூடிய தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை உடனே செயல்படுத்த தமிழக முதல்வர் அதிரடியாக உத்தரவிட்டார் திட்டத்தின் படி கடைசி மாத ஊதியத்தில் 50% ஓய்வூதியமாக கிடைக்கும் என்று அரசு அறிவித்துள்ளதால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தலைமைச் செயலகத்தின் கோட்டைக்கு சென்று முதல்வருக்கு இனிப்பு ஊட்டி மகிழ்ந்ததை இந்த தமிழ்நாட்டு மக்கள் ஆனந்தத்துடன் கண்டுகளித்தனர்கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் அமல்படுத்த போராடி வந்த அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின்ஜாக்டோ ஜியோ அமைப்பான கடந்த மூன்றாம் தேதி ஓய்வூதியம் குறித்த நல்ல புதிய அறிவிப்பைவெளியிட இருப்பதாக அமைச்சர்கள் தெரிவித்தனர் இது குறித்து நேற்று காலை சென்னை தலைமைச் செயலகத்தில் அமைச்சர்களுடன் ஆய்வு நடத்திய பின்அரசு ஊழியர்களின் வாழ்வில் சிறப்பான ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்து ஒளி ஏற்றி வைத்துள்ளார்அரசு ஓய்வூதியம் என்பது அரசு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஓய்வுக்கு பிறகும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டிய சமூக பாதுகாப்பு என்பதை உறுதி செய்து அதன் சமூக நீதிக் கொள்கையை மீண்டும் உறுதியுடன் செயல்படுத்தி உள்ளது நாட்டுக்கு முன் உதரணமான அமையும் சிறப்பான நடவடிக்கைக்குஅரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள் சங்கத்தினர் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்ததை பார்க்கும் பொழுது 2026 சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதிகளிலும்திமுகவும்அதன் கூட்டணி கட்சிகளுமே வெல்லும் என்பதை தெளிவாக சொல்லுகிறோம் என்று கூறினார்

# திமுகவும் தொழிலாளர்களும் எனக்கு இருகண்கள்

## தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி பேச்சு



தூத்துக்குடி லைசன்ஸ் தாரா்கள் உப்பளங்களில் விற்று முதல் சுமை வேலைகள்செய்துவரும் சங்கத்தின் உறுப்பினா்களுக்கு பொங்கல் போனஸ் வழங்கும் நிகழ்ச்சி போல்பேட்டை முகாம் அலுவலகத்தில் நடைபெற்றது.

சங்க உறுப்பினர்களுக்கு போனஸ் வழங்கி மேயர் ஜெகன் பெரியசாமி பேசுகையில் திமுகவில் கலைஞரின் முரட்டு பக்தனாக இருந்து எனது தந்தையார் 20க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களில் பல்வேறு பொறுப்புகளை வகித்து தொழிலாளர்கள் நலன் மட்டுமின்றி திமுகவின் வளர்ச்சிக்கும் பணியாற்றியது மட்டுமின்றி ஒவ்வொரு ஆண்டும். உப்பள அதிபர்களுடன் இணக்கமாக பேசி தொழிலாளர்களுக்கு கூலி உயர்வும் பெற்று கொடுத்தாா் அவரது மறைவிற்கு பின்புபல்வேறு தொழிற்சங்க பிரதிநிதிகள் வேண்டுகோளின்படி அப்பணியை தொடர்ந்து பொறுப்பேற்று செய்து வருகிறேன். மாநகரின் அடையாளமும் பிரதான தொழிலுமான உப்பளத் தொழிலில்ஈடுபட்டுள்ள தூத்துக்குடி உப்பு தொழிலில்ஈடுபட்டுள்ள தொழிலாளா்களக்கு தாங்கள் சிறு சிறுக சேமித்த பணத்தை சங்கத்தின் தலைவர் என்ற முறையில் அவர்களுக்கு போனஸாக வழங்கி வருகிறேன் உங்கள் தலைமுறைக்கு பின்னா் வரும் குடும்ப உறுப்பினா்கள் திமுகவிற்கும் தளபதியாருக்கும் துணையாக இருக்க வேண்டும். திமுகவும் தொழிலாளா்களும் எனக்கு இருகண்கள் என்று பேசினாா்.

நிகழ்ச்சியில் செயலாளா் மூர்த்தி, வட்டச்செயலாளர் ரவீந்திரன், மின்வாாிய தொழிற்சங்க தலைவர் பேச்சிமுத்து போல்பேட்டை பகுதி பிரதிநிதிகள் பிராபாகா், ஜேஸ்பா், உப்பள சங்கத்தை சேர்ந்த கனகராஜ், விஜி, உள்பட பலர் கலந்து கொண்டனர்

# விருத்தகிரீஸ்வரர் கோவிலில் ஆருத்ரா தரிசனம்



விருத்தாசலத்தில் சுமார் 3 ஆயிரம் வாய்ந்த பிரசித்தி பெற்ற விருத்தகிரீஸ்வரர் கோயில் அமைந்து உள்ளது.

இக்கோயிலில் சிவகாமி அம்மன் உடனுறை நடராஜர் சன்னதியில் திருவாதிரை நட்சத்திர நாளை முன்னிட்டு நேற்று ஆருத்ராதரிசனம் நடைபெற்றது. இதற்காக மூலவருக்கு பால், நெய், தயிர், பன்னீர், சந்தனம் உள்ளிட்ட பல்வேறு பொருட்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது இதில்

திரளான பக்தர்கள் பங்கேற்பு

மற்றும் ஆராதனைகள் நடந்தது. தொடர்ந்து சிவகாமி அம்மன் உடனுறை நடராஜர் உற்சவருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகளும் மகாதீபாராதனையும் நடந்தது. அதனை தொடர்ந்து நடராஜர் சிறப்பு மலர் அலங்காரத்தில் அருள் பாலிக்க மகாதீபாராதனை காண்பிக்கப்பட்டு சுவாமி புறப்பாடு நடைபெற்றது. அப்போது சிவகாமி அம்மன் உடனுறை நடராஜரை தாலாட்டியபடி கோயிலின் உட் பிரகாரத்தை வலம் வந்து கண்டராதித்தன் கோபுரம் ராஜகோபுரம் வழியாகவந்தபோது ஆருத்ரா தரிசனம் காண்பிக்கப்பட்டது.

இதில் விருத்தாசலம் பகுதியை சுற்றியுள்ள ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு ஓம் நமச் சிவாய என கோஷமிட்டு சாமி தரிசனம் செய்தனர்.



ஈரோடுகிழக்குசட்டமன்றத்தொகுதியின்முன்னாள் உறுப்பினரும், இளந்தலைவருமான மறைந்த இ. திருமகன் ஈவெரா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் தினம் நேற்று நடைபெற்றது. இதையொட்டி, ஈரோடு பழைய ரயில்வே ஸ்டேஷன் பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் அன்னாரது குடும்பத்தார்,உறவினர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சியினர், பொதுமக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர்

முன்னாள் மத்திய இணைஅமைச்சரும்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் அவர்களின் மகன் திருமகன் ஈவெரா, தனது குறுகிய கால மக்கள் பணியால் தொகுதி மக்களின் இதயங்களில் நீங்கா இடம் பிடித்தவர்.

நேற்றைய தினம் (04.01.2025) நடைபெற்ற இந்த உருக்கமான நிகழ்வில், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே.என்.பாஷா மலர்தூவி மௌன அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்வின் போது திருமகன் ஈவெரா அவர்கள் காட்டிய மக்கள் சேவைப் பாதையில் தொடர்ந்து பயணிப்பதே அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி" என கே.என் பாஷா தெரிவித்தார்.

# ஈரோட்டில் பாஜக விவசாய அணி சார்பில் மாபெரும் விவசாய கண்காட்சி வானதி சீனிவாசன் தொடங்கி வைத்தார்







மஞ்சள் மாநகரமான ஈரோட்டில் பாரதிய ஜனதா கட்சியின் விவசாய அணி சார்பில் நடத்தப்படும் விவசாயிகள் விழிப்புணர்வு மாநாட்டை முன்னிட்டு, மாபெரும் மாபெரும் விவசாய கண்காட்சி நேற்று கோலாகலமாகத் தொடங்கியது. ஈரோடு - திண்டல், வில்லரசம்பட்டி பகுதியில் உள்ள லட்சுமி துரைசாமி திருமண மஹால் திடல் எதிரில் நூற்றுக்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. முழுவதும் விவசாயிகளே நேரடியாகப் பங்கேற்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இக்கண்காட்சியில் இயற்கை வேளாண் உற்பத்திப் பொருட்கள், பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் நவீன வேளாண் கருவிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று காலை நடைபெற்ற தொடக்க விழாவில் பாஜக தேசிய மகளிர் அணி தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமானவானதிசீனிவாசன் குத்துவிளக்கேற்றி கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். விவசாய அணி மாநில தலைவர் ஜி.கே.நாகராஜ்,மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்ட தலைவர்கள்,

இயற்கை விவசாயத்தின் அவசியம் குறித்தும் விவசாயிகளின் நேரடி விற்பனை வாய்ப்புகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடினர்.

இந்நிகழ்வில் ஈரோடு தெற்கு மாவட்ட தலைவர் எஸ்.எம். செந்தில், விவசாய அணி மாநில செயலாளர் பன்னீர்செல்வம், மாவட்ட தலைவர் சந்திரசேகர், மாவட்ட செயலாளர் கணேசன், தன்னார்வ தொண்டு நிறுவனப் பிரிவு மாநில செயலாளர் கிருத்திகா சிவ்குமார் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் ஏராளமான விவசாயிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு திண்டல் பகுதியில் பாரதிய ஜனதா கட்சியின் விவசாய அணி சார்பில் நடத்தப்படும் விவசாயிகள் விழிப்புணர்வு மாநாட்டை முன்னிட்டு, மாபெரும் இயற்கை வேளாண் கண்காட்சி கோலாகலமாகத் தொடங்கியது. பாஜக தேசிய மகளிர் அணி தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான வானதி சீனிவாசன் இக்கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். விவசாய அணி மாநில தலைவர் ஜி.கே.நாகராஜ், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சி.சரஸ்வதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கண்காட்சியில் ஈசி வாட்டர் இந்தியா நிறுவனத்தின் சார்பில் உப்பு நீரை மென்நீராக மாற்றும் தொழில்நுட்பம் காட்சிப்படுத்தப்பட்டது. இதனைப் பார்வையிட்ட தமிழ் மாநில காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் எம்.யுவராஜா, இக்கருவியைத் தனது வீட்டில் பொருத்துவது குறித்து ஆர்வம் காட்டியதுடன், அதன் செயல்முறை மற்றும் பயன்கள் குறித்து ஈசி வாட்டர் இந்தியா நிறுவனத்தின் உரிமையாளர் அக்னி ராஜேஷிடம் விரிவாகக் கேட்டறிந்தார்.



சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியாரின் 296வது பிறந்தநாளை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம் சூரக்குளம் ஊராட்சியில் அமைந்துள்ள வீரமங்கை வேலுநாச்சியாரின் நினைவு மண்டபத்தில், வீரமங்கை வேலுநாச்சியாரின்திருவுருவச்சிலைக்குதமிழ்நாடுஅரசின்சார்பாககூட்டுறவுத்துறைஅமைச்சர்கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில், பாராளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ். மாங்குடி, மாவட்ட ஆட்சியர் பொற்கொடி உள்ளிட்டோர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் சிவகங்கை நகர் மன்ற தலைவர் துரை ஆனந்த், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், பல்வேறு கட்சிகளை சேர்ந்த பிரமுகர்கள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ரெயில் முன் பாய்ந்து முன்னாள் ராணுவ வீரர் தற்கொலை

அமராவதி,

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் மாவட்டம் கஞ்ச்வாகா பகுதியை சேர்ந்தவர் வெங்கட ரமணா (வயது 64). இவர் இந்திய ராணுவத்தில் பணியாற்றிபின்னர்பணி ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்றப்பின் விசாகப்பட்டினத்தில் உள்ள இரும்பு ஆலையில் வேலை செய்தார். பின்னர், கஞ்ச்வாகா பகுதியில் சூப்பர் மார்க்கெட் தொடங்கி தொழில் நடத்தி வந்தார்.

இந்நிலையில், சூப்பர் மார்க்கெட் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. தொழில் நஷ்டத்தால் வெங்கட ரமணாவுக்கு கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் மன உளைச்சல் அடைந்த வெங்கட ரமணா இன்று துவாடாபகுதியில்உள்ள ரெயில் நிலைய பகுதிக்கு சென்றுள்ளார். அங்கு ரெயில் நிலையம்அருகே தண்டவாள பகுதிக்கு சென்ற வெங்கட ரமணா அப்போது தண்டவாளத்தில் பெங்களூரு சென்றுகொண்டிருந்த ரெயில் முன் பாய்ந்தார்.

இதில்,வெங்கடரமணா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், வெங்கட ரமணாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மாணவியின் இருதய அறுவை சிகிச்சைக்கு உதவி செய்த ரோட்டரி அமைப்புக்கு நன்றி

நண்பர்களே எங்கள் பள்ளியில் பயிலும் மாணவிக்கு இருதயத்தில் பிரச்சனை இருப்பதாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக பள்ளிக்கு வருகை புரிந்த அரசு மருத்துவர்கள் கூறி சென்றார்கள்.

மாணவிக்குசிகிச்சை கிடைக்க,மேல்சிகிச்சை எடுக்க முயற்சி செய்ய வேண்டும் என்றும், சிவகங்கைக்கு அழைத்து வர வேண்டும் என்றும், தெரிவித்து சென்றார்கள்.

நாங்களும் பலமுறை பெற்றோர்களிடம் கூறினோம். அவர்களும் அதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. எங்கள் குழந்தை நன்றாகத்தான் இருக்கிறது என்றுகூறிவிட்டார்கள். மீண்டும் மீண்டும் அரசு மருத்துவர்கள் எங்களை தொடர்பு கொண்டார்கள். பெற்றோர்களிடமும் பேசினார்கள் .ஆனால் அதற்கெல்லாம் பெற்றோர்கள் மசியவில்லை. எங்கள் குழந்தை நன்றாகத்தான் இருக்கின்றது. நீங்கள் தான் தெரியாமல் கூறுகிறீர்கள் என்று எங்களிடம் கூறிவிட்டார்கள். நாங்களும் செய்வதறியாது திகைத்து நின்றோம். ணவியின் பெற்றோர் பயந்து போய் இருந்தனர்.இந்நிலையில் ஒருநாள் காரைக்குடியிலிருந்து தேவகோட்டை செல்லு ம்பொழுது மருத்துவ இதயம் வரைந்த பேருந்து ஒன்றை பார்த்தேன்.




உடனடியாக ரோட்டரியின் ஆளுநர் இதயம் முத்து அண்ணாச்சி அவர்களைதொடர்புகொண்டேன் . அவர்கள் விருதுநகரில் வசித்து வருகிறார்கள்.

ஜே சி அமைப்பின் மூலம் முன்பே அவர்கள் நல்ல அறிமுகமாக இருந்ததாலும் , எங்கள் பள்ளிக்கு வருகைதந்து மாணவர்களுடன் கலந்துரையாடி சென்றதாலும் , அவர்களின் மூலமாக இருதய அறுவை சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ய அவர்களிடம் விசாரித்தேன். காரைக்குடியில் உள்ள ரோட்டரி லியாகத் அலி அவர்களை தொடர்புகொண்டு பேசினேன். அவர்களும் முதல்வரின் காப்பீட்டுத் திட்டத்தில் மாணவியை முதலில் இணைய சொன்னார்கள். சிவகங்கையில்முதல்வரின் காப்பீட்டு திட்டத்தில் பணியாற்றும் சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சேகர் நல்ல முறையில் ஒத்துழைப்பு வழங்கினார். மிக எளிதாக காப்பீட்டு திட்ட அட்டை கிடைக்க ஏற்பாடு செய்தார் .

அதன் பிறகு பிளட் டெஸ்ட் காரைக்குடியில் எடுப்பதற்கும் ரோட்டரி லியாக்கத் அலி அவர்களேபணஉதவிசெய்து, சென்னை செல்வதற்கும் பண உதவி செய்து மாணவிக்கு தேவையான அனைத்து ஆலோசனைகளையும் வழங்கினார்கள்.

மாணவியும் அப்போலோ மருத்துவமனை சென்றார்கள். சென்னையில் அறுவை சிகச்சைக்கு முன்பு இரண்டு நாட்கள் இலவசமாக உணவுடன் தங்குவதற்கு இதயம் முத்து அண்ணாச்சி அவர்களின் ரூம் உதவியாக இருந்தது. அறுவை சிகிச்சை செய்ய உள்ள அப்பல்லோ மருத்துவமனையும் இவர்களின் ரூமும் அருகில் இருப்பது குறிப்பிடத்தக்கது. சென்னை இதயம் ரூமில் சம்பத் அவர்கள் நல்ல முறையில் மாணவியையும் ,பெற்றோர்களும் தங்குவதற்கு உதவி செய்தார்.சென்னையிலே அப்போல்லோ மருத்துவமனையில் தேவையான ரத்தம் உட்பட அனைத்தையும்ரோட்டரிலியாகத் அலி அவர்களே ஏற்பாடு செய்தார்கள். மாணவியின் பெற்றோருக்கு நம்பிக்கையையும், தைரியத்தையும் லியாக்கத் அலி அவர்கள் ஏற்படுத்தினார்கள்.அப்பல்லோ மருத்துவமனையில்நிருவாக பொறுப்பில் இருக்கும் ராஜ்குமார் அவர்களும் நல்ல முறையில் தகவல் தெரிவித்து உதவி செய்தார்கள்.

சமீபத்தில்கூட அரசு மருத்துவர்கள்என்னை சந்தித்த பொழுது, பல அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவ மாணவியருக்கு இருதய நோய் தொடர்பாக தகவல்களை கூறுகிறோம். இருதய நோய் இருப்பதை பெற்றோர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.அவர்கள் எங்கள் குழந்தை நன்றாகத்தான் இருக்கிறது என்று கூறிவிடுகிறார்கள்.

தொடர்ந்து அவர்களை வலியுறுத்தினால் படிக்கும் பள்ளியில் இருந்து டி ,சி. யை பெற்று வேறு பள்ளிக்கு சென்று விடுகிறார்கள் என்றெல்லாம் மருத்துவர் வருத்தமாக கூறினார்கள்.இந்த நிலையில் ரோட்டரி லியாகத் அலி, ரோட்டரி இதயம் முத்து அண்ணாச்சி, அப்போலோ மருத்துவமனை நிர்வாகத்தினர் என அனைவரும் எங்களுக்கு பல விதங்களிலும் உதவி செய்து மாணவியின் இருதய அறுவை சிகிச்சைக்கு உதவி செய்ததுடன் , நம்பிக்கையையும் தைரியத்தையும் ஏற்படுத்திக் கொடுத்ததற்கு இந்த நேரத்தில் மிக்க நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். ஏழ்மை நிலையில் உள்ள பள்ளி மாணவர்களின் இருதயபிரச்சினை தொடர்பாக உதவி வேண்டுபவர்கள் திரு.லியாகத் அலி அவர்களை கிழ்கண்ட 9842482326 எண்ணிலும்,இத்திட்ட ஒருங்கிணைப்பாளர் சுடலைவேல் அவர்களை 9750955445 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல், தொண்டு உள்ளத்தோடு இவர்கள் செய்யும் உதவிக்கு உங்களது பாராட்டுக்களையும் , வாழ்த்துக்களையும் தெரிவிக்கலாம்.நன்றி.



சிவகங்கைமாவட்டம்,விசுவாவசுவருடம்மார்கழிமாதம்18ஆம்தேதிதட்சிணாயணம் பௌர்ணமி நாளன்று, ராமநாதபுரம் மாவட்டம் திரு உத்தரகோசமங்கையில் உள்ள பழமையான சிவாலயங்களில் ஒன்றான மங்களநாதர் மங்களேஸ்வரி திருக்கோவிலில் ஐந்தரை அடி உயரமுள்ள மரகதத்திலான நடராஜர் சிலைக்கு ஆருத்ரா சிறப்பு அபிஷேக வழிபாடு மேற்கொள்ளப்பட்டது. நடைபெற்ற இந்த ஆருத்ரா அபிஷேக வழிபாட்டிற்கு சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஸ்ரீ சிவசக்தி நாட்டியாலயா பள்ளி மாணவிகள் டாக்டர் பி. சுரேஷ் தலைமையில், ஆதி சிதம்பர ஆருத்ரா நாட்டியாஞ்சலி 2026ல் பரதநாட்டிய அரங்கேற்றம் நிகழ்த்தினர். இந்த பரதநாட்டிய அரங்கேற்றத்தில் பங்கேற்ற ஸ்ரீ சிவசக்தி நாட்டியாலயா பள்ளி மாணவிகளுக்கு ஆதி சிதம்பர ஆருத்ரா நாட்டியாஞ்சலி சார்பாக பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஸ்ரீ சிவசக்தி நாட்டியாலயா பள்ளி நிர்வாகிகள் மற்றும் மாணவிகளின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.






கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் அடுத்துபெரிய ஜோகிப்பட்டி கிராமத்தில் ஓம் சக்தி கோயில் மாலை அணிவித்து இன்று கோயிலுக்கு சுமார் 60க்கும் மேற்பட்ட பக்தர்கள் அம்மனைய் தரிசிக்க மேல்மருவத்தூர் சென்றுள்ளனர் பெரிய ஜோகிப்பட்டி ஓம் சக்தி கோயிலில்வழிப்படும் போது பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கி பக்தர்கள்கோயிலுக்கு புறப்பட்டு சென்றனர் மேலும் பக்தர்கள் மேலும் வளர்ச்சி பெற ஊர் பொதுமக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டனர்



சிவகங்கை மாவட்டம் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணிபுரிந்து வந்த மருத்துவர் தங்கதுரை சனிக்கிழமை காலை எப்பொதும் போல் பணிக்கு புறப்பட்டபோது திடீர் நெஞ்சுவலி ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். மருத்துவரின் இறுதிச்சடங்கில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர், மருத்துவரோடு பணிபுரியும் சக மருத்துவர்கள் பணியாளர்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மருத்துவரின் இந்த திடீர் இறப்பு சம்பவமானது மருத்துவருடன் பணிபுரிபவர்கள், மருத்துவரால் சிகிச்சை பலன் பெற்றவர்கள், குடும்பத்தினர், உறவினர்கள், மருத்துவரிடம் மருத்துவ பயின்று வரும் மாணவர்கள் என பலரையும் அதிர்ச்சியிலும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளதாக பலர் வேதனை தெரிவித்தனர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.